முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# எதிர்காலம் குறித்த
# இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த
# மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்

**(விளம்பி தை மாதம் 20ம் திகதி முதல் தை மாதம் 27ம் திகதி வரை**
**பிப்ரவரி 03ம் திகதி முதல் பிப்ரவரி 10ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **கருணை வடிவாக தெய்வபலமும்**
**கண்ணியமிக்க ஞானிகள் பலமும்**
**பெருமைகளும் மிகுந்த தமிழகமே**
**பேதமில்லா ஒற்றுமை நிறைந்த பாரதமே**

**2.** **பாரதம் தமிழகம் தன்னில்**
**பாடிடுவேன் விளம்பி கலை திங்கள்**
**கூறவே இருபான் திகதி மேல் இருபானேழ் திகதி வரை**
**(விளம்பி வருடம் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிறு முதல் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிறு முடிய)**
**குறையிலா இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை**

**3.** **பலனை சுப்பிரமணியர் யானும்**
**பாடிடுவேன் வார ஆசியாக**
**பலமாக தமிழகம் நிலை உயர**
**பாரதம் தளர்த்த வேண்டும் வரிச்சுமையை**

**4.** **சுமையான கழனி மக்களின்**
**சுபிட்சமான வாழ்வுக்கு உதவி**
**நேமமுடன் வாழ்வாதாரம் நிலைக்க**
**நீதிப்படி செயல்முறை காண**

**5.** **காணவே பரதமும் தமிழகமும்**
**கழனி வகை பெரும் வளர்ச்சிகண்டு**
**தானதருமமும் பெருக நேரும்**
**தமிழகம் தக்க பலமான ஆளுமை**

**6.** **ஆளுமை அடைய வேண்டுமாயின்**
**அவசியம் வகுப்புவாத சிக்கலில்லா**
**வலுவான தமிழர்கள் இந்தியர்கள் எனும்**
**வளமான சிந்தை தெளிவு கொண்டு**

**7.** **கொண்டுமே ஆளுமை உருவாக**
**குறையில்லா சேவை ஆற்றும்**
**தொண்டு நிலைக்கு வருகவே**
**தெய்வீக ஆட்சி எனும் சொல்லும் வண்ணம்**

8. வண்ணமுடன் ஆறுமுகன் என் தயவுபட
வலுவான ஞான ஆட்சி மலரும்
எண்ணம் வழி ஞானம் தந்து
இளம் தலைமுறையை வளர்க்கும் துறை

9. துறை அதிகாரிகள் பெருந்தகைகள்
தேச நலம் மக்கள் நலம் கருதி
குறை காணா சுயநலம் கொள்ளா
குறுகிய மனப்பான்மை இல்லா செயல்பட

10. செயல்படவே தமிழகம் தானும்
சிறப்பான நிலைக்கு மாறும்
தயவு உள்ள மக்களை பெற்ற தமிழகம்
தாயகமும் நல்ல தலைமை கண்டால்தான்

11. கண்டால்தான் வளரும் மலரும்
கருணை பெருக தலைமை மக்கள்
தொண்டுமிகுந்த அரங்கமகா ஞானியின்
துறையூர் மண்ணை தொட்டு

12. தொட்டுமே ஆறுமுகன் என் அருள்
தேசிகனை வணங்கி ஆசி பெற
வாட்டமான மனநிலை விலகி
வல்லமையான வள்ளல் தன்மை மிக்க

13. மிக்கநல் ஞான அறிவும் முதிர்வும்
முருகன் என் அருளும் பெருகிட
தேக்கமிலா ஞான ஆட்சியாக மாறும்
தென்னகம் பாரதம் உயர்நிலை அடையும் வார ஆசி முற்றே.

—சுபம்—

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிறு முதல் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

கருணையே வடிவாகிய தெய்வங்களின் அருள்பலத்தையும் கண்ணியமும் ஞானமும்மிக்க ஞானிகளின் அருள்பலத்தையும் தன்னகத்தே கொண்டு பலவிதமான பெருமைகளை மிகுதியாக கொண்டிட்ட தமிழகத்திலும் பல்வேறு வேற்றுமைகள் உள்ளபோதும் வேற்றுமையிலும் ஒற்றுமையாக பேதமில்லாது இருக்கும் பாரததேசத்திலும் விளம்பி வருடம் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிறு முதல் தை மாதம் 27ம் நாள் 10.02.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியர்.

தமிழகம் பலம்பெற்று முன்னேற்றத்தினை அடைய வேண்டுமாயின் மத்திய அரசு விதித்துள்ள வரிகளை கருணையோடு தளர்த்திட வேண்டும். நலிந்து வருகின்ற விவசாய மக்களின் துன்பங்களை போக்கிட அவர்களது வாழ்வு சுபிட்சமடைந்திட நேசக்கரம் நீட்டி அவர்களது வாழ்வாதாரம் நிலைத்திட நீதியுடன் நடந்து செயல்பட வேண்டும்.

விவசாய பெருங்குடி மக்களின் மகிழ்ச்சியே நாட்டின் வளர்ச்சியாகும். விவசாய மக்களின் பிரச்சனைகளை அரசு தீர்த்துவிட்டால் விவசாய வகையில் பெரும் வளர்ச்சிகள் நாட்டில் உருவாகி நாட்டின் பொருளாதாரமும் உயரும், தானதருமங்களும் நாட்டினில் பெருகிடும்.

தமிழக அரசு ஆட்சி பலம் பெற வேண்டுமாயின் தமிழகத்தில் நிலவும் வகுப்புவாத சிக்கலை நீக்கி தமிழர்கள் எனும் பொது மனப்பான்மையும், நாம் இந்தியர்கள் எனும் நற்சிந்தனையும் மக்களின் மனதில் தெளிவு வேண்டும். அதன் அடிப்படையில் ஆட்சி செய்திட ஆட்சி வலுப்பெறும், குறைவின்றி தன்னலமற்று பொதுநலமாய் செயல்பட்டு சேவை மனப்பான்மையுடன் தொண்டுகளை செய்து வந்தால், ஆட்சியை சேவையாக செய்து வந்தால், தெய்வீக ஆட்சி என்று மக்களெல்லாம் சொல்லும்விதமாக ஆட்சி செய்திட அந்த தேசத்தினில் முருகப்பெருமான் எனது தயவினால் வலுவான ஞானஆட்சி மலர்ந்திடும்.

தயவு சிந்தையுடைய அதிகாரிகளின் எண்ணங்களின் மூலமாக சுப்பிரமணியர் யானும் இளம் தலைமுறையை வளர்க்கும் அதிகாரிகள் மற்றும் பெருந்தகைகள் மூலம் செயல்படுவேன். துறை அதிகாரிகளும் பெருந்தகைகளும் தேசநலம் மக்கள் நலம் கருதி குறைகாணா முடியாத வகையில் சுயநலம் கொள்ளாமல் குறுகிய மனப்பான்மை இல்லாமல் செயல்பட தமிழகம் சிறப்புமிக்க நல்லநிலையை அடைந்திடும்.

தயவு உள்ள மக்களைப் பெருமளவில் கொண்டுள்ள தமிழகமும் தாயகம் இந்தியாவும் நல்ல தலைமைக்கு கீழ் வந்து ஆட்சி செய்யப்பட்டால்தான் இந்த நாடும் தேசமும் வளர்ச்சியடையும் மலர்ச்சி அடையும்.

ஆட்சி செய்வோரிடத்து கருணை பெருகிட வேண்டுமாயின் ஆட்சி பொறுப்பில் உள்ளோர் தொண்டு சக்தியும் அருள்சக்தியும் மிகுந்த அரங்கமகா ஞானியின் வாழ்விடமாம் ஏழாம் படை வீடு அமைந்த ஞானபீடமான துறையூருக்கு வருகை தந்து குடிலினை நாடிச் சென்று ஆங்கே முருகப்பெருமானின் அவதாரமாக வீற்றிருக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனை வணங்கி ஆசி பெற, அவர்களைப் பற்றிய மனவாட்டங்கள் எல்லாம் நீங்கி வல்லமை பெருகி வள்ளல் தன்மைமிக்க சிந்தை வளர்ந்து ஞானஅறிவும் ஞானமுதிர்வும் முருகப்பெருமான் எனது அருளும் பெருகிடும். ஞானமுதிர்ச்சியும் தயைசிந்தையும் ஞானஅறிவையும் பெற்று எமது அருளையும் பெற்றிட ஆட்சி புரிவோரின் ஆட்சி தடையற்ற ஞானஆட்சியாக மாறிடுமப்பா என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றேன் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–